# DIOCESE OF CHINGLEPUT

## NEWS LETTER

website:www.chengaidiocese.org
Email : chengaidiocese@yahoo.co.in

*Ph : 27426649*
*Fax : 27431784*

**Vol. 08 No.09 September 2010**



**வார்த்தையை வாழ்வாக்கிய அன்னையே – எங்கள்**
**வாழ்வுக்கு வழிகாட்டிய உம்மையே – உம்**
**பிறப்பு நாளில் வாழ்த்துகிறோம்!**

## OBITUARY



The Archbishop of Hyderabad **Most Rev. Dr. Marmpudi Joji** passed away on 28th August, 2010. His body was laid to rest in St. Joseph's cemetery at the foot of St. Mary's Shrine at Gunadala in Vijayawada.

## MONTHLY RECOLLECTION

| Date | Vicariate | Place |
|---|---|---|
| 01.09.10 | Our Lady of Mount Carmel (Covelong) | Mamallapuram |
| 01.09.10 | St. Antony (Palavakkam) | Medavakkam |
| 09.09.10 | St. Joseph (Chingleput) | Mambakkam |
| 09.09.10 | Our Lady of Rosary of Fatima (Tambaram) | Kolapakkam |
| 15.09.10 | Immaculate Heart of Mary (Kancheepuram) | Valarpuram |
| 15.09.10 | Mazhai Malai Madha (Madurantagam) | Acharapakkam Shrine |
| 15.09.10 | St. Thomas (St. Thomas Mount) | Meenambakkam |
| 16.09.10 | St. John De Britto (Palliagaram) | Perungozhi |
| 23.09.10 | Our Lady of Good Voyage (Cheyyur) | Cheyyur |

## OFFICIAL NOTIFICATION

| | |
|---|---|
| 08.09.10 | Nativity of B.V. Mary<br>**HOLIDAY FOR THE CURIA** |
| 14.09.10 | Exaltation of the Holy Cross - Feast |
| 29.09.10 | **8th Anniversary of our Bishop's Consecration and the Inception of Our Diocese.**<br>Feast of HOLY ARCH ANGELS MICHAEL, RAPHAEL & GABRIEL.<br>**HOLIDAY FOR THE CURIA** |
| 01.10.10 | St. Theresa of Child Jesus - Feast |
| 02.10.10 | Gandhi Jayanthi - **HOLIDAY FOR THE CURIA** |
| 02.10.10 | Mazhai Malai Madha Feast - Secondary Patroness of our Diocese |



# From Bishop's Desk...

**September 2010**

***அன்புள்ள அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, அருட்சகோதரர்களே, என் அன்புக்குரிய மக்களே!***

***"நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக்காப்பேன்... நானே என் மந்தையை மேய்த்து, இளைப்பாறச் செய்வேன் என்கிறார் தலைவராகிய ஆண்டவர். காணாமல் போனதைத் தேடுவேன்; அலைந்து திரிவதைத் திரும்பக் கொண்டு வருவேன்: காயப்பட்டதற்குக் கட்டுப்போடுவேன்; நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன்..." (எசேக்கியேல் 34: 1,15-16)***

சென்னை – மயிலை உயர் மறைமாவட்டத்தின் அங்கமாயிருந்த நம்மை செங்கை மறைமாவட்டமெனும் தனியொரு திருஅவையாக உருவாக்கிச் செயல்பட வைத்தது இறைவனின் தனிப்பெருங்கருணை. **"அனைவரும் வாழ்வு பெறவேண்டும் அதை நிறைவாகப் பெறவேண்டும்,"** (யோவான் 10:10) எனும் இலட்சியக் கனவோடு நம் பயணத்தைத் தொடங்கிய நாம் இந்த செப்டம்பர்த் திங்களோடு எட்டு ஆண்டுகளை நிறைவு செய்து, ஒன்பதாம் ஆண்டில் தடம் பதித்து, பத்தாம் ஆண்டை நோக்கிப் பயணத்தைத் தொடருகின்றோம்.

நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப்பார்க்கின்றபோது இறைவன் எத்துணை அற்புதமாய் நம்மை வழிநடத்தி வந்துள்ளார் என்பதை உணர்ந்து அவருக்கு நன்றிப்பண்பாடுகின்றோம். ஒரு தாயின் கரிசனையோடு, நல்லாயனின் அக்கறையோடு ஆண்டவர் நம்மை வழிநடத்தி வந்திருக்கின்றார். பல நிலைகளிலே நாம் வளர்ச்சி கண்டுள்ளோம் என்பது மறுக்கமுடியாத உண்மை இந்த வளர்ச்சிகளுக்கெல்லாம் அடித்தளமாகவும், ஆணிவேராகவும், முழுமுதற்காரணமாகவும் கடவுள் இருந்திருக்கின்றார் என்பது நாம் நன்றியோடு ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு உண்மை. இன்னும் நாம் காணவேண்டிய முன்னேற்றங்களும், வளர்ச்சிகளும் ஏராளமாக உள்ளன என்பதும் மறைக்கவியலாத உண்மை. இதுகாறும் நம்மோடு உடனிருந்து நம்மை வழிநடத்திய நல்ல தேவன் இனியும் நம்மை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து வழிநடத்திடுவார் என்பது நம் அசைக்கமுடியாத நம்பிக்கை.

நாம் தனி மறைமாவட்டமாக உதயமானபோது நமது கூட்டுப்பயணம் இப்படித்தான் அமையவேண்டுமென்று நமக்கென்று ஒரு இலட்சிய அறிக்கையை வரையறை செய்துக்கொண்டோம். அந்த இலட்சிய அறிக்கையை அடித்தளமாகக் கொண்டு நமது மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணித் திட்டங்களையும் ஏனைய செயல் திட்டங்களையும் வகுத்துக்கொண்டோம். நமது மறைமாவட்டம் பத்தாம் ஆண்டை நோக்கி நடைபோடும் இவ்வேளையில் நம்முடைய இலட்சிய அறிக்கையை நாம் எந்த அளவு உண்மையாக வாழ்ந்திருக்கிறோம் என்பதை ஆழமாக அலசிப்பார்ப்பது நம் அனைவரின் கடமை. நமது செயல்பாடுகளும், மேய்ப்புப்பணிகளும் மக்களை வாழவைத்துள்ளனவா? நிறைவாழ்வுப் பாதையிலே அவர்களை அழைத்துச் சென்றுள்ளனவா? என்பதையும் நாம் ஆராய்ந்து பார்த்தாகவேண்டும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் நமது பணிமுறைகளையும், அனுகுமுறைகளையும், செயல்பாடுகளையும் மாற்றியமைத்து எதிர்வரும் பத்தாண்டுகளுக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்களைத் தீட்டுவது காலத்தின் கட்டாயமாக அமைகின்றது. நமக்கென்று நாம் அமைத்துக்கொண்ட இலட்சிய நிலைப்பாடுகளிலே தெளிவுகளை ஏற்படுத்திக்கொண்டு, அவற்றை இன்னும் கூர்மைப்படுத்திக்கொண்டு, நமது எதிர்காலப் பயணத்தை நாம் நம்பிக்கையோடு தொடர வேண்டும். இலட்சியங்களும், கொள்கைகளும் ஏட்டளவிலே மட்டும் இருப்பது யாருக்கும் பயன்தராது. எனவே அருட்பணியாளர்களும், துறவிகளும், இறைமக்களும் தங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பித்து உறுதிப்படுத்துவது மறைமாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இது நமது மறைமாவட்டம்; இதன் வளர்ச்சியிலே எனக்கும் அக்கறையுண்டு; அனைவரும் அவரவர் பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும் - எனும் உணர்வுகள் நம் ஒவ்வொருவருக்கும் இருத்தல்வேண்டும். இல்லையேல் எல்லா மட்டங்களிலும் வளர்ச்சிக்கு மாறாக, தொய்வும் பின்னடைவுமே காணப்படும்.

நம் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் **நம் மறைமாவட்டத்தின் முதல் பத்தாம் ஆண்டின் நிறைவில் "இறை மக்கள் பேரவை" ஒன்றை நடத்துவதென்று நாம் திட்டமிட்டுள்ளோம்.** கடந்து வந்த பத்தாண்டுகளில் நம்முடைய வாழ்வையும் பணியையும் ஆய்வு செய்யவும், எதிர்கால ஆக்கப்பணிகளுக்கான திட்டமிடவும் இந்த இறைமக்கள் பேரவை பெரிதும் துணைபுரியும் என்று நான் எண்ணுகிறேன்.

**"இறைமக்கள் பேரவை"** என்பது ஒரு சிலரின் செயல்பாடல்ல என்பதை நாம் முதலில் உணர்ந்தாகவேண்டும். அருட்பணியாளர்கள், துறவறத்தார்,

இறைமக்கள், மறைமாவட்ட நிர்வாகம் என நாமனைவருமே முழுமையாய் ஒத்துழைப்பு நல்கினாலொழிய நாம் திட்டமிடும் மாமன்றம் ஒரு பொருளற்ற சடங்கென முடிந்துவிடும். எனவே இம்மறைமாவட்டத்தின் தலைமைப் பணியாளன் என்ற முறையில் உங்கள் அனைவரின் ஈடுபாட்டையும், முழுமையான ஒத்துழைப்பையும் நாடுகின்றேன்.

இரண்டாம் வத்திக்கான சங்கத்திற்குப்பிறகு, பங்கேற்பு அமைப்புக்களின் செயல்பாடுகளுடன், திருஅவை புத்துயிருடன் செயல்படுகிறதென்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு தலத்திரு அவையும் மக்கள் அனைவரின் பங்கேற்பையும், பங்களிப்பையும் உறுதி செய்திடவேண்டும். கூட்டாக சிந்திக்கவும், ஒன்றிணைந்து முடிவெடுக்கவும், ஒற்றுமையாக செயல்படவும் நாம் தீர்மானித்து, தலத்திரு அவையை வளர்த்தெடுக்க வேண்டும். இதுவே இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்குக் காட்டும் பாதை. நமது கூட்டுச் செயல்பாட்டை எளிதாக்க மறைமாவட்ட அளவில் மாமன்றங்கள் நடத்தவேண்டுமென்பது சங்கம் கூறும் தங்க அறிவுரை ***(காண்க: இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச்சபை, எண் 36).***

என் அன்பு சகோதர குருக்களே, துறவியரே, பாசத்துக்குரிய என் மக்களே, நடைபெறவிருக்கும் நம் மறைமாவட்ட மாமன்றத்திற்கான தயாரிப்புக்களிலும், பல மட்டங்களில் நடைபெறும் கலந்துரையாடல் மற்றும் கலந்தாய்வரங்கங்களிலும், பேரவையையொட்டிய செயல்பாடுளிலும் நீங்களனைவரும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் கலந்துகொண்டு, மாமன்றத்தை வெற்றிபெறச் செய்வீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன். மக்களின் வாழ்விலே வெளிச்சம் பிறப்பதும், மறைமாவட்டம் முன்னேற்றப்பாதையிலே முனைப்பொடு செல்வதுமே நம் உண்மையான வெற்றி என்பதனைக் கருத்தில் கொண்டு செயல்படுவோம். பேரவையின் வெற்றிக்காக அனைத்துப் பங்குகளிலும் சிறப்பாக செபிக்கவேண்டுமென அன்போடு வேண்டுகிறேன்.

நல்லாயன் கிறிஸ்துவின் அருளோடும் ஆசியோடும், நம் பாதுகாவலர்களின் கனிவான வழிகாட்டுதலில் நம் இலட்சியப் பயணத்தைத் தொடருவோம்.

இறையாசீர்



**+ அ. நீதிநாதன்**

**செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர்**

# மேய்ப்புப்பணியக செய்திகள்

**ANNUAL CLERGY RETREAT**

**DATE:** **November 07, 2010, Sunday** (Supper) to **Friday November 12, 2010 (Lunch)**

**PLACE:** **DMI Retreat House, St. Thomas Mount**

**PREACHER:** **Rev. Fr. Joseph Abraham**

Please note the dates and make yourself available on all the days totally disposed for the annual retreat.

## பணிக்குழு செயலர்களுக்கான கூட்டம்

நமது மறைமாவட்ட பணிக்குழு செயலர்களுக்கான கூட்டமானது ஆகஸ்ட் 11ம் தேதி காலை 10.30 மணியளவில் நமது ஆயர் இல்லக் கூட்ட அரங்கில் நமது பாசமிகு ஆயர் தலைமையில் நடைபெற்றது. நமது மறைமாவட்ட வேந்தர் தந்தையவர்கள், தனது துவக்கவுரையில் பணிக்குழுக்கள் ஒன்றொடொன்று இணைந்து நமது மறைமாவட்ட வளர்ச்சிக்காக பாடுபட வேண்டுமென்றும், குழுக்களின் செயல்பாடுகள் மக்களை சேரும்விதமாக அமைய வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறினார். அதன்பின் கூட்டத்தில் கலந்துகொண்ட பணிக்குழு செயலர்களும் தங்கள் குழுவின் அறிக்கையை ஆயர் முன் சமர்ப்பித்தனர், ஆயர் அவர்கள் ஒவ்வொரு பணிக்குழுவின் செயல்பாட்டினையும் ஆய்வு செய்தார்கள். பின் ஆயர் அவர்கள், தனது சிறப்பு உரையில், பணிக்குழுக்களின் செயல்பாடுகள் நிறைவை அளிக்கின்றதெனவும் இனி வருங்காலங்களில், நம்முடைய திட்டமிடல் நகர்புறம் மற்றும் கிராமபுறம் ஆகிய இருமுனையையும் சீராய் சென்றடையும் வண்ணம் அமைய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**இயக்குநர்**

# பொதுநிலையினர் பேரவை கூட்டம்

ஆகஸ்ட் 14 ம் தேதி பொதுநிலையினர் பேரவை கூட்டம் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 02.30 மணி வரை கூட்டம் மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நமது ஆயர் **மேதகு நீதிநாதன்** அவர்கள் தலைமை தாங்கினார். மேலும் இக்கூட்டத்திற்கு மறைமாவட்ட வேந்தர் அருட்பணி. லூயிஸ் ராயர், மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன், சென்னை உயர் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை நிர்வாகியும், தமிழ்நாடு, பாண்டிச்சேரி கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவையின் பொருளாளருமான திருமிகு. எட்வின் ராஜ் அவர்களும், சென்னை உயர் மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு செயலர் திருமிகு. ஆண்டனி பெர்னான்டோ அவர்களும் மற்றும் பல்வேறு பங்குகளிலிருந்து வந்திருந்த பங்கு பேரவை நிர்வாகிகளுமாக மொத்தம் 37 நபர்கள் பொதுக்குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொதுநிலையினர் பேரவை 2003 முதல் இன்றைய நாள் வரை ஆற்றிய பணிகள் பற்றி பொதுநிலையினர் பேரவையின் தலைவர் திரு. மரியதிரவியம் அவர்கள் அறிக்கையை வாசித்து ஒப்புதல் பெற்றார். அதன்பின் செங்கல்பட்டு மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் பேரவை பொறுப்பாளர்கள் தேர்வு நடத்தப்பட்டது.

பின்னர் ஆயர் அவர்கள் தன்னுடைய ஏற்புரையில் மறைமாவட்ட பணிகளில் பொதுநிலையினர் பணி மிக மிக அத்தியவசியமான ஒன்று என கூறி பொதுநிலையினர் ஆற்றும் பணிகளுக்கு நன்றி கூறினார்.

## மறைமாவட்ட நிர்வாகிகள்

| | |
|---|---|
| **புரவலர் :** | **மேதகு ஆயர் நீதிநாதன்**, |
| **அருள் நெறியாளர்:** | அருட்பணி ஜார்ஜ் ஸ்டீபன், மேய்ப்புப்பணி நிலைய இயக்குநர் |
| **தலைவர் :** | திரு. மரியதிரவியம், பழைய பொருங்களத்தூர் |
| **துணைத்தலைவர்:** | திருமதி. T. அருள்மேரி, தாம்பரம் |
| **செயலர் :** | திருமதி. அருள்சீலி அந்தோணி , ஆலந்தூர் |
| **பொருளாளர்:** | திரு. எஸ். தேவசகாயம், மதுராந்தகம் |

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**அருள்நெறியாளர்**

# அன்பியம்

## பயிற்சி

ஜீலை 25 ம் தேதி எலப்பாக்கம் பங்கில் அன்பிய பயிற்சி மற்றும் திருப்பலி நடைபெற்றது. இதில் பங்கு மக்கள் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள்.

ஆகஸ்ட 01 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சட்ராஸ் பங்கில் காலை 06.30 மணிக்கு அன்பிய செயலர் அருட்பணி ஜார்ஜ் ஸ்டீபன் தலைமையில் திருப்பலி, அன்பிய அறிமுகம் நடைபெற்றது. நான்கு குழுக்களாக பிரித்து குழு பயிற்சி அளிக்கப்பட்டது. கிளைப்பங்கான கல்பாக்கத்தில் காலை 09.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. முடிவில் அன்பியத்தைப் பற்றிய அறிமுகம் வழுங்கப்பட்டது.

## களப்பணி

ஜீலை 26 ம் தேதி முதல் 31 ம் தேதி வரை எலப்பாக்கம் பங்கில் அன்பிய களப்பணி நடத்தப்பட்டது. அன்பிய களப்பணியாளர்கள் காலையில் வீடுகளை சந்தித்து, மாலையில் மாதிரி அன்பிய கூட்டம் நடத்தினர். அதை தொடர்ந்து அன்பிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மொத்தம் 13 அன்பியங்கள் உருவாக்கப்பட்டன.

## அன்பிய ஒருங்கிணைப்பு கூட்டம்

ஆகஸ்ட் 08ம் தேதி மறைமாவட்ட அளவில் அன்பிய ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது.

பங்கேற்ற பங்குகள் மொத்தம்: 52 பங்கேற்காத பங்குகள்: 30

பங்கேற்ற அருட்சகோதிரிகள்: 45 பங்கேற்ற நபர்கள் மொத்தம்: 158

## மறைவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

### செங்கல்பட்டு மறைவட்டம்

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. எம். தேவன் | செங்கல்பட்டு |
| துணைத்தலைவர் | திருமதி. மேரி தங்கராஜ் | மறைமலைநகர் |
| செயலர் | திரு. ஜேக்கப் | வாலாஜாபாத் |
| இணைச்செயலர் | புவனேஸ்வரி | மாம்பாக்கம் |

**கோவளம் மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. வின்சென்ட் பால்ராஜ் | சட்ராஸ் |
| துணைத்தலைவர் | வேளாங்கண்ணி | முட்டுகாடு |
| செயலர் | திருமதி. ஆலிஸ் ரோலன்டு | மகாபலிபுரம் |
| இணைச்செயலர் | அமலோற்பவம் | சட்ராஸ் |

**மதுராந்தகம் மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. அருண் | மதுராந்தகம் |
| துணைத்தலைவர் | மரியதாஸ் | K.K. புதூர் |
| செயலர் | பியூலா | செண்டிவாக்கம் |
| இணைச்செயலர் | சாமந்தி | காந்தி நகர் |

**பாலவாக்கம் மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. வைலட்ராஜ் | சோழிங்கநல்லூர் |
| துணைத்தலைவர் | ராஜ்குமார் | துரைபாக்கம் |

**பல்லாவரம் மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. ஜோசப் செல்வராஜ் | காமராஜபுரம் |
| துணைத்தலைவர் | திரு. புஷ்பராஜ் | நந்தம்பக்கம் |
| செயலர் | திரு. பிரபுராஜ் | பல்லாவரம் |
| இணைச்செயலர் | வின்சி | காமராஜபுரம் |

**பள்ளியகரம் மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. வின்சென்ட் | பள்ளியகரம் |
| துணைத்தலைவர் | சோப்பியா | மல்லிகாபுரம் |
| செயலர் | சேவியர் | பாப்பநல்லூர் |
| இணைச்செயலர் | அருள் அற்புதம் | R.N. கண்டிகை |

**தோமையார் மலை மறைவட்டம்**

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திரு. சார்லஸ் | மாதாநகர் |
| துணைத்தலைவர் | சகாயமேரி | வாணுவம்பேட்டை |
| செயலர் | லூர்து மேரி | மீனம்பாக்கம் |
| இணைச்செயலர் | பெனடிக்ட் | மணப்பாக்கம் |

## தாம்பரம் மறைவட்டம்

| பொறுப்பு | பெயர் | பங்கு |
|---|---|---|
| தலைவர் | திருமதி. அருள் மேரி | தாம்பரம் |
| துணைத்தலைவர் | திரு. அமல்ராஜ் | பெருங்களத்தூர் |
| செயலர் | டெரன்ஸ் | மகாலட்சுமிநகர் |
| இணைச்செயலர் | நிர்மலா | வளன்நகர் |

## மறைவட்ட அளவில் அன்பிய ஒருங்கிணைப்பாளர்கள் அருட்சகோதரிகளை தேர்வு செய்தனர்.

| மறைவட்டம் | பெயர் |
|---|---|
| செங்கல்பட்டு | அருட் சகோதரிகள். கசிமிர், FSJ & எலிசபெத், SAP |
| கோவளம் | அருட்சகோதரிகள். கிளேவ்மேரி, OSM & இருதயராணி, FBS |
| பாலவாக்கம் | அருட்சகோ. செல்வி, UFS |
| தாம்பரம் | அருட்சகோ. ஆன்டனியா, FMA |
| காஞ்சிபுரம் | அருட்சகோ. அக்ஸிலியா, FBS |
| மதுராந்தகம் | அருட்சகோ. மார்கிரேட் மரியாள், FIHM |
| | அருட்சகோ. வெரோணிக்கா, FBS |
| பள்ளியகரம் | அருட்சகோ. கிறிஸ்டி, ISME & அருட்சகோ. சுகிர்தா, FBS |
| புனித தோமையார் மலை | அருட்சகோ. ஜேசு மேரி, HFB |

### மாநில அளவில் அன்பிய கூட்டம்

ஆகஸ்ட 09 ம் தேதி மாநில அளவில் அன்பிய செயலர்கள் கூட்டம் திருச்சி தீபத்தில் நடைபெற்றது. அதை தொடர்ந்து கூட்டத்தில் மாநில அன்பிய செயலர் அவர்கள் அன்பிய அறிக்கை சமர்ப்பித்தனர். மற்ற அன்பிய செயலர்கள் அவரவர் அறிக்கையை வாசித்தனர். செங்கல்பட்டு மறைமாவட்டம் சார்பாக அன்பிய செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் கலந்து கொண்டார்.

## அன்பான வேண்டுகோள்

### மறைவட்ட அன்பிய ஒருங்கிணைப்பு கூட்டம்

மறைவட்ட அன்பிய ஒருங்கிணைப்பாளர்க்கான கூட்டம் செப்டம்பர் 11 ம் தேதி மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மறைவட்ட அன்பிய ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

# மறைக்கல்வி பணிக்குழு

## பள்ளி சந்திப்பு

| நாள் | பள்ளியின் பெயர் | இடம் |
|---|---|---|
| 17.08.10 | R.C. துவக்கப்பள்ளி | பாப்பநல்லூர் |
| 17.08.10 | R.C. துவக்கப்பள்ளி | வேடந்தாங்கல் |
| 17.08.10 | R.C. துவக்கப்பள்ளி | ஓங்கூர் |
| 17.08.10 | R.C. துவக்கப்பள்ளி | பெருங்கோழி |
| 17.08.10 | லொயாலா உயர்நிலைப்பள்ளி | குப்பையநல்லூர் |

சந்திக்கப்பட்ட இப்பள்ளிகளில் இயேசுவின் கண்மணிகள் இயக்கம் உருவாக்கப்பட்டு அதற்கான வழிகாட்டி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடங்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

## Annual Retreat for Teachers

Annual Retreat for all the teachers working in the diocesan schools as well as in the religious schools is scheduled as follows:

| S.No | Date/Time | Place |
|---|---|---|
| 01 | 23.10.10 /09.30 am - 04.00 pm | St. Antony's Church, Madurantagam (Tamil) |
| 02 | 23.10.10 /09.30 am - 04.00 pm | Our Lady of Immaculate Heart of Mary Church, Kancheepuram (Tamil) |
| 03 | 23.10.10 /09.30 am - 04.00 pm | St. Sebastian Matriculation School, Pallavaram (Tamil) |
| 04 | 30.10.10 /09.30 am - 04.00 pm | Our Lady of Fatima Church's Hall, Tambaram (Tamil) |
| 05 | 30.10.10 /09.30 am - 04.00 pm | Seashore St. Antony's Church, Palavakkam(Tamil) |
| 06 | 20.11.10 /09.30 am - 04.00 pm | Pastoral Centre, Chingleput (Tamil) |
| 07 | 20.11.10 /09.30 am - 04.00 pm | St. Patrick's Church, St. Thomas Mount (English) |

***Lunch will be provided***

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

# மரியாயின் சேனை

ஆகஸ்ட் 07 மற்றும் 08 ம் தேதிகளில் எலப்பாக்கம் பங்குத் தளத்தில் பங்குத் தந்தை **அருட்பணி. செபாஸ்டின் ராபர்ட்** MSFS அவர்களின் ஒத்துழைப்புடன் பல்லாவரம் கியூரியாவிலிருந்து நான்கு உறுப்பினர்கள் முகாமிட்டு 120 இல்லங்களை சந்தித்து, அன்பிய ஜெப வழிபாடுகள் நடத்துதல், குடும்ப ஜெபம்/ ஜெபமாலை ஜெபிப்பது, திருப்பலிகளில் பங்கேற்றல் போன்றவைகளை வலியுறுத்தினர். மேலும் ஈச்சங்காடு என்ற கிளைப்பங்கில் பெண்களுக்கான முதியோர் பிரசீடியம் துவங்கப்பட்டது.

ஆகஸ்ட் 13 ம் தேதி முதல் 15 ம் தேதி வரை மூன்று நாட்கள் 30 சேனையாளர் ஆர். என் கண்டிகை கிராமத்தில் 200 கத்தோலிக்க இல்லங்களை சந்தித்து, பங்கின் வளர்ச்சிக்கும் , ஒற்றுமைக்கும் மற்றும் பல்வேறு கருத்துக்களுக்காக ஜெபித்து திருப்பலியில் கத்தோலிக்க முறைப்படி பங்குகொள்ள வேண்டும் எனவும் எடுத்துகூறினர். ஆகஸ்ட் 22 ம் தேதி 26 உறுப்பினர்களை கொண்ட முதியோர் மற்றும் பெண்களுக்கான **வெற்றியின் மாதா** என்ற பிரசீடியத்தினை அம்மையப்பநல்லூர் பங்குத்தந்தை அருட்பணி. அமலதாஸ் அவர்கள் பெயர் சூட்டி பொறுப்பாளர்களை தேர்வு செய்து பொறுப்புகளை ஒப்படைத்து ஆசி வழங்கி வாழ்தினார்.

ஆகஸ்ட் 15 ம் தேதி அன்னையின் விண்ணேற்பு விழா அன்று பள்ளியகரம், பாப்பநல்லூர், பெருங்கோழி, ஓங்கூர் மற்றும் மல்லிகாபுரம் ஆகிய பங்குகளை ஒன்றிணைத்து, மல்லிகாபுரத்தில் உத்திரமேரூர் கியூரியாவானது மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் தலைமையில், அப்பங்குத்தந்தை அருட்பணி ஜெயராஜ் HGN அவர்களின் முன்னிலையில் தொடங்கப்பட்டது. மேலும் நமது ஆயர் அவர்கள் அருட்பணி. ஜெயராஜ் HGN அவர்களை ஆன்ம குருவாக நியமித்த நியமன உத்திரவு அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களால் வழங்கப்பட்டது.

**திரு. எஸ். அந்தோணிசாமி**
**கொமித்சிய செயலர்.**

# திருவழிபாட்டு பணிக்குழு

## திருவழிபாட்டு பாசறை பயிற்சி

**இடம்** : செங்கல்பட்டு மேய்ப்புபணி நிலையம், திம்மாவரம்

**நாள்** : 16.10.2010

**நேரம்** : காலை 9 .00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**கலந்துகொள்ளும் நபர்கள் :**

பங்கு பாடகற்குழு, பங்கு திருவழிபாட்டு குழு, அன்பிய இறைவேண்டல் பொறுப்பாளர்கள்.

பங்குத்தந்தையர் தங்கள் பங்கிலுள்ள பாடற்குழு, பங்கு திருவழிபாட்டு குழு, மற்றும் அன்பிய இறைவேண்டல் பொறுப்பாளர்களை தவறாமல் கலந்துக்கொள்ள வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

# பொதுநிலையினர் பணிக்குழு

கடந்த ஜீலை மாதம் 14-ம் நாள், நமது மறைமாவட்டத்திலிருந்து திருப்பணியாளர் பயிற்சிக்கு அனுப்பபட்ட நான்கு நபர்கள், வெற்றிகரமாக தங்களது 2 1/2 ஆண்டுக்கால பயிற்சியினை முடித்து, அதற்கான சான்றிதழை திண்டுக்கல்லில் நடைபெற்ற தமிழக ஆயர் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்ட நமது பாசமிகு ஆயர் அவர்களிடமிருந்து முறையாக பெற்றுக்கொண்டனர். இத்தொடர் பயிற்சியினை தியாக உணர்வோடு ஏற்று முடித்த **திருவாளர்கள் டானியேல் கணேஷ், திவ்ய நாதன், ஜெயபால்**, மற்றும் **அந்தோணி** அவர்களுக்கு இப்பணிக்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

ஆகஸ்டு மாதம் 07 மற்றும் 08 ம் தேதிகளில் திருப்பணியாளர் மற்றும் கருத்தாளர் பயிற்சியினை முடித்த நமது மறைமாவட்டத்தை சேர்ந்த 08 நபர்கள் திருச்சி பிராட்டியூரிலுள்ள தமிழக பொதுநிலையினர் உருவாக்க மையத்தில் திறமை வளர்ப்பு பயிற்சியினை மேற்கொண்டனர்.

ஆகஸ்ட் 21 மற்றும் 22 தேதிகளில் திருச்சி பிராட்டியூரில் நடைபெற்ற முதுநிலை உருவாக்கப் பயிற்சியில் நமது மறைமாவட்டத்திலிருந்து ஒரு நபர் கலந்து கொண்டார்.

இவ்வாண்டிற்கான **அஞ்சல் வழி இறையியல் கல்வியில்** நமது மறைமாவட்டத்திலிருந்து 60 பேர் இப்பயிற்சியினை அஞ்சல் மூலம் மேற்கொள்ள திருச்சி பிராட்டியூரிலுள்ள உருவாக்க மையத்தில் பதிவு செய்துள்ளனர். 30 மாதங்கள் நடைபெறவுள்ள இத்தொடர் பயிற்சியின் இறுதியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**திரு. இக்னேசியஸ்**
**செயலர்**

## நற்செய்தி பணியகம்

ஆகஸ்ட் 01 ம் தேதி அச்சிறுப்பாக்கம் மழை மலை மாதா அருட்தலத்தில் காலை 09.00 மணி முதல் 06.00 மணி வரை எல்லா நற்செய்தி பணியாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சியினை செயலர் அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட் தலைமையில் அருட்பணி. தம்புராஜ் சே.ச. அவர்கள் வழங்கினார். செயலர் தலைமையில் டிசம்பர் மாதம் வரையிலான பணிப்பகிர்வுகள் திட்டமிடப்பட்டன.

இளையோர் ஆண்டை ஒட்டி இளையோரை நற்செய்தியாளர்களாக ஊக்குவிக்க ஆலோசனை செய்யப்பட்டது.

விவிலியத்தில் இளையோர் எனும் தலைப்பில் விவிலியத்தில் இடம் பெற்றுள்ள இளையோரின் அழைப்பு, வாழ்வு, சாட்சியம் குறித்த தரவுகளை புத்தகமாக்க ஆலோசிக்கப்பட்டது.

பொதுநிலை நற்செய்தி பணியாளர்கள் பங்குத்தந்தையுடன் இணக்கமாக இருப்பதும், அவரின் அனுமதியில்லாமல் பங்கிலுள்ள வீடுகளுக்கு நற்செய்தி பணி ஆற்றுவது முறையல்ல என்பதும் அறிவுறுத்தப்பட்டது.

விவிலியத்தில் பயிற்சியோ, பட்டய படிப்போ, நற்செய்தி முகாம்களுக்கு வழிநடத்துதலோ பெற விரும்புவோர் நற்செய்தி அறிவிப்பு பணியகத்தின் செயலரை அணுகவும்.

**தொடர்புக்கு**

**புதிய மின்னஞ்சல் முகவரி:** ***proclaimchengai@gmail.com***

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## SC/ST பணியகம்

தலித் கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்ப்பதற்கான போராட்டத்தின் தொடர்ச்சியாக நமது கோரிக்கையை முழங்கி 60 ஆண்டுகள் ஆகியிருப்பதை குறிக்கும் நாளான ஆகஸ்ட் 10 ம் தேதி, செவ்வாய்க்கிழமையன்று ஒரு நாள் ஆர்பாட்டம் இந்தியா முழுக்க ஒவ்வொரு தலித் கிறித்தவர் வீடுகளிலும், பள்ளி, கல்லூரிகளிலும், ஆலயங்களிலும் கறுப்பு கொடி ஏற்றி எதிர்ப்பு தினமாக அனுசரிக்க CBCI - SC/ST பணியகங்களின் தலைவர் ஹைதராபாத் மறைமாவட்ட **பேராயர் மேதகு மாரம்புடி ஜோஜி** அவர்களும், TNBC - SC/ST பணியகங்களின் தலைவர் செங்கை மறைமாவட்ட **ஆயர் மேதகு நீதிநாதன்** அவர்களும், NCDC இயக்கமும் அழைப்பு விடுத்தனர். நமது ஆயர் தலைமையில் பேரணி மற்றும் உரைவீச்சுகள், முழக்கங்களுடன் பேராலய கொடி கம்பத்தில் கறுப்பு கொடி ஏற்றப்பட்டது. சுமார் 500 க்கும் மேற்பட்ட தலித் மக்கள், பெண்கள், DCLM உறுப்பினர்கள், குருக்கள், அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். இதை மறைவட்ட முதன்மை குருவும், மறைமாவட்ட SC/ST பணியக செயலரும் இணைந்து ஒருங்கிணைத்தனர்.

ஆகஸ்ட் 17 ம் தேதி மதுரை - அய்டியாஸ் மய்யம் நடத்தும் பயிற்றுநர்களுக்கான இரு நாட்கள் (19, 20) தலைமைத்துவ பயிற்சி நடைபெற்றது. நமது மறைமாவட்டத்தலிருந்து கரும்பாக்கம் பங்கைச் சேர்ந்த உறுப்பினர் செல்வன். தினேஷ் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

### நிகழ இருப்பன

### மறைவட்ட செயலர்களுக்கான மண்டல அளவிலான கூட்டம்

**நாள்:** செப்டம்பர் 04, 2010 **நேரம்:** காலை 09.00 மணி முதல்

**இடம்:** மேய்ப்புப்பணி மையம், ஆயர் இல்ல வளாகம், திம்மாவரம்

### பொதுக்குழு கூட்டம்

**நாள்:** செப்டம்பர் 04, 2010 **நேரம்:** காலை 09.00 மணி முதல்

**இடம்:** மேய்ப்புப்பணி மையம், ஆயர் இல்ல வளாகம், திம்மாவரம்

**குறிப்பு:** பங்குத்தந்தையர் தவறாமல் SC/ST பணியக உறுப்பினர்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## தொடர்புக்கு

**புதிய மின்னஞ்சல் முகவரி:** *scstchengai@gmail.com*

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## கிறித்தவ தொழிலாளர் இயக்க பணியகம்

ஜீலை மாதம் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் செயலர் தந்தை அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட் அவர்களுடன் ஆயர் அவர்களை சந்தித்தனர். பின் கடந்த 05 ஆண்டுகளுக்கான ஊக்கத்தொகை ரூ. 25,000/- பெற்றுக்கொண்டு ஆயரின் ஆசீரோடு திரும்பினர். நலிந்த தொடர் சந்திப்பற்ற பங்குகளின் இயக்கங்களை கட்டி எழுப்புவும், இன்னும் இயக்கம் இல்லா பங்குகளை சந்தித்து இயக்கத்தை உருவாக்க ஊக்குவிக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

### பங்கு சந்திப்பு

18.07.2010 - வாலாஜாபாத் (தவிர்க்க முடியாத காரணத்தால் சந்திக்க முடியவில்லை

25.07.2010 - செங்கல்பட்டு (ஞாயிறு சந்திப்பு குழு வலுபெற்றது)

வழக்கமாக மாதத்தின் 03 வது ஞாயிறன்று நடைபெறும் மாதாந்திர கூட்டம் ஜீலை 15 ம் தேதி தாம்பரம் பங்கில் நடைபெற்றது.

### சிறப்பு செயல்பாடுகள்

தேசிய அளவிலான கூட்டம் மற்றும் தேர்தல் வருகின்ற செப்டம்பர் 08, 09 மற்றும் 10 தேதிகளில் கோவாவில் நடைபெற உள்ளது. அதில் மூன்று நபர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

### சிறப்பு கருத்தரங்கம்

பணியக உறுப்பினர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கம் அக்டோபர் 26 ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

## தொடர்புக்கு

**புதிய மின்னஞ்சல் முகவரி:** *cwmchengai@gmail.com*

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

# இறையோர் பணிக்குழு

## மறைமாவட்ட அளவில்

ஆகஸ்ட் 20 ம் தேதி காலை 10 மணியளவில் இ.கி.மா / இ.மா (YCS/YSM) மாணவ மாணவியர் பொதுக்குழு கூட்டம் இறைவழிபாட்டுடன் தொடங்கப்பட்டது. அதில் 25 பள்ளிகளிலுமிருந்து தலா இரண்டு மாணவர்களும் ஒரு வழிகாட்டி ஆசிரியரும் மொத்தம் 75 நபர்கள் கலந்துகொண்டு அவர்களின் இயக்க செயல்பாட்டு அறிக்கையை சமர்பித்தனர். அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட இளைஞர் பணியக முழு நேரப் பணியாளர் இ.கி.மா/இ.மா (YCS/YSM) பற்றிய வரலாற்றையும், அருட்சகோதரர் இயக்கத்தின் இலக்கு நோக்கிய புதிய செயல்பாட்டு திட்டங்களை பற்றிய ஆலோசனைகளையும் வழங்கினார். இறுதியாக இயக்குநர் தந்தை உரையுடன் அறிவிப்புகளையும் மாணவர்களுக்கு வழங்கினார். அதன்பின் வழிகாட்டி ஆசிரியப் பொறுப்பாளர் நன்றி கூறி இப்பயிற்சியை நிறைவு செய்தார்.

## பங்கு அளவில்

| | | |
|---|---|---|
| 01.08.2010 | மீனம்பாக்கம் | பரிசுத்த ஆவி ஆலயம் |
| 01.08.2010 | முடிச்சூர் | திருக்குடும்ப ஆலயம் |
| 05.08.2010 | பள்ளிக்கரணை | குழந்தை இயேசு ஆலயம் |
| 08.08.2010 | துரைப்பாக்கம் | தூய சகாய மாதா ஆலயம் |
| 08.08.2010 | செங்கல்பட்டு | புனித சூசையப்பர் பேராலயம் |
| 12.08.2010 | வாணுவம் பேட்டை | புனித யூதா ததேயு ஆலயம் |
| 15.08.2010 | காந்திநகர் | புனித லூர்து அன்னை ஆலயம் |

**செங்கை மறைமாவட்ட இளைஞர்களுக்கான**
**மாபெரும் சிறப்பு ஆன்மீக தியானம்**

**நாள் :** 05.09.2010

**இடம் :** மலைமலை மாதா அருட்தலம், அச்சிறுபாக்கம்

**நேரம் :** காலை 09.00 மணி முதல் மாலை 03.30 மணி வரை

அனைத்து பங்குத்தந்தையர்களும் தங்களது பங்கிலிருந்து இளைஞர்களை ஊக்குவித்து இத்தியானத்தில் கலந்துகொள்ளச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## சிறப்புப் பயிற்சி

செப்டம்பர் 18, 19 2010 (சனி மற்றும் ஞாயிறு) (பெண்கள் மட்டும்)
நவம்பர் 06, 07 2010 (சனி மற்றும் ஞாயிறு) (ஆண்,பெண்)
பங்கேற்பாளர்கள் 40 பேர் மட்டுமே

பங்குத்தந்தையர்களும் தங்களது பங்கு இளைஞர்களை ஊக்குவித்து இப்பயிற்சிகளில் பங்கெடுத்து பயன்பெறச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆகஸ்ட் 29 ம் தேதி கல்பாக்கம் பங்கை சார்ந்த இளைஞர்கள் மறைவட்ட அளவில் கருத்தமர்வையும், இரத்த தான முகாமையும் நடத்தினர்.

**அருட்பணி K.C. அமலோற்பவராஜ்**
**செயலர்**

## பெண்கள் பணிக்குழு

**பெண் குழந்தைகள் தினக்கொண்டாட்டம்** வருகின்ற செப்டம்பர் மாதம் 12 ம் தேதி மேய்ப்புபணி மையத்தில் நடைபெற உள்ளது. தங்கள் பங்கில் உள்ள பெண்குழந்தைகளை இக்கொண்டாட்டத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இளைஞர் ஆண்டை முன்னிட்டு இவ்வாண்டு 10 மற்றும் 12 ம் வகுப்பு முடித்த பெண் பிள்ளைகளில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு பெண் குழந்தைகள் தினக் கொண்டாட்டம் அன்று அவர்களை சிறப்பித்து பணியகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கபட உள்ளன. எனவே தங்கள் பங்கின் அதிக மதிப்பெண் பெற்றவர்கள் மதிப்பெண் பட்டியல் நகலை மேய்ப்புப்பணி மையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆகஸ்ட் 10 ம் தேதி எஸ்டி.எஸ்சி பணிக்குழு நடத்திய கருப்பு தின போராட்டத்தில் பெண்கள் பணிக்குழு செயலர் மற்றும் பெண்கள் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். .

**திருமதி. லில்லி மேரி**
**செயலர்**

# பங்குதள செய்திகள்

## R.N. கண்டிகை பங்கு செய்தி

ஆகஸ்ட் 07 ம் தேதி R.N. கண்டிகை பங்கில் முதல் சனிக்கிழமை பக்தி முயற்சி கொண்டாடப்பட்டது. ஜெபமாலை செபிக்கப்பட்டு, திருப்பலி, நிறைவேற்றப்பட்டது. இதில் மொத்தம் 200 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

### R.N. கண்டிகை பங்கில் மரியாயின் சேனை சந்திப்பு

ஆகஸ்ட் 12,13 மற்றும்14 ம் தேதிகளில் R.N. கண்டிகை பங்கில் மரியாயின் சேனையாளர்கள் வீடுகளை சந்தித்து மரியாயின் சேனையின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கி கூறினர்.

ஆகஸ்ட் 15 ம் தேதி R.N. கண்டிகை பங்கில் இளைஞர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு அதை தொடர்ந்து அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். இளைஞர் பணிக்குழு சார்பாக அருட்சகோதரர். ஜீவா இளைஞர்கள் பணி, கடமை, முக்கியத்துவத்தை பற்றி பேசினார்கள். மொத்தம் 40 இளையஞர் கலந்து கொண்டார்கள்.

ஆகஸ்ட் 27 ம் தேதி ஞாயிறு அன்று R.N. கண்டிகை பங்கில் மாலை திருப்பலிக்கு பிறகு 30 பெண்களுக்கு மரியாயின் சேனை பற்றி கூறப்பட்டது. அப்பங்கில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு வெற்றி மாதா பிரசிடியம் என்று பெயர் வைக்கப்பட்டது. சகோதரர். அந்தோணி சாமி (மறைமாவட்ட மரியாயின் சேனை செயலர்), சகோதரர். பர்த்தலோமியூ (மறைமாவட்ட மரியாயின் சேனை பொருளர்) இருவரும் இக்கூட்டத்தினை அருட்பணி. அமலதாஸ் OCD அவர்களின் தலைமையில் சிறப்புடன் துவங்கினர்.

## HOLY FATHER’S PRAYER INTENTIONS FOR SEPTEMBER 2010

**GENERAL:** That in less developed parts of the world the proclamation of the Word of God may renew people’s hearts, encouraging them to work actively toward authentic social progress.

**MISSION:** That by opening our hearts to love we may put an end to the numerous wars and conflicts which continue to bloody our world.

# FROM THE PROCURATOR'S DESK

## SCHOLARSHIPS ISSUED FOR THE ACADEMIC YEAR 2010 - 2011

### List of the Students Received Scholarships for various Professional Courses for the year 2010 - 2011

*B.E.*

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 366 | Philomianjela R. ® | Acharapakkam Shrine | 5000.00 |
| 02 | 310 | Melba Princy T.L ® | Chettimedu | 5000.00 |
| 03 | 185 | Benitta Rani S. (N) | Guduvancherry | 5000.00 |
| 04 | 339 | Angel Priya D. (N) | Kancheepuram | 5000.00 |
| 05 | 400 | Madhan K. ® | Karumbakkam | 5000.00 |
| 06 | 246 | George Bush L. ® | Kolapakkam | 5000.00 |
| 07 | 249 | Divya B. (N) | Kolapakkam | 5000.00 |
| 08 | 237 | Auxi Pavithra V.K. (N) | M.N. Kandigai | 5000.00 |
| 09 | 364 | Udhayakumar J. ® | Perungozhi | 5000.00 |
| 10 | 365 | Rajesh Kumar J. (N) | Perungozhi | 5000.00 |
| 11 | 359 | Arun Prakash R. (N) | Sadras | 5000.00 |
| 12 | 130 | Arun J. ® | Sholinganallur | 5000.00 |
| 13 | 041 | Antony Manesh A. ® | Valan Nagar | 5000.00 |
| 14 | 085 | Mercy M. (N) | Vippedu | 5000.00 |

**TOTAL Rs.70,000.00**

**DIP**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 001 | Anu Sharmila L. (N) | Chingleput | 3000.00 |
| 02 | 394 | Karthick M. (N) | Gandhi Nagar | 3000.00 |
| 03 | 398 | Jaya Kumar A. (N) | Gandhi Nagar | 3000.00 |
| 04 | 384 | Edwin Muthaiya J. (N) | Karumbakkam | 3000.00 |
| 05 | 373 | Charles I. ® | Melrosapuram | 3000.00 |
| 06 | 074 | Tony Ilayaraja A. (N) | Pappanallur | 3000.00 |
| 07 | 025 | Luciana B. (N) | R.N. Kandigai | 3000.00 |
| 08 | 036 | John Bosco M.A. (N) | Sendivakkam | 3000.00 |
| 09 | 178 | Abinesh K. ® | Sriperumbudur | 3000.00 |
| 10 | 063 | Anandaraj A. (N) | Thatchoor | 3000.00 |
| 11 | 318 | Gunasekaran N. (N) | Thirukazhukundram | 3000.00 |

**TOTAL Rs. 33,000.00**

### ITI

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 019 | Bakiya Raj G. (N) | Ammaiyappanallur | 1500.00 |

**TOTAL Rs. 1,500.00**

### DTE

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 174 | Celin @ Kalaivani J. (N) | Cheyyur | 5000.00 |
| 02 | 313 | Arokia Mary J. ® | Dharkast | 5000.00 |
| 03 | 240 | Jenifer K.A. (N) | M.N. Kandigai | 5000.00 |
| 04 | 295 | Maria Jasmine J. (N) | Muttukadu | 5000.00 |
| 05 | 334 | Vincy Chithra ® | Ongur | 5000.00 |
| 06 | 335 | Sivaranjani V. (N) | Ongur | 5000.00 |
| 07 | 220 | Metil Metha M. (N) | Palnellore | 5000.00 |
| 08 | 073 | Ansi A. (N) | Pappanallur | 5000.00 |
| 09 | 362 | Viji M. ® | Perungozhi | 5000.00 |
| 10 | 320 | Riveka V. (n) | Thirukazhukundram | 5000.00 |

**TOTAL Rs.50,000.00**

### NURSING

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 266 | Immaculate Mary S. ® | Molasur | 5000.00 |
| 02 | 268 | Mary Lincy Joy P. (N) | Molasur | 5000.00 |
| 03 | 098 | Glory R. (N) | Oragadam | 5000.00 |
| 04 | 075 | Usharani J. (N) | Pappanallur | 5000.00 |
| 05 | 361 | Sangeetha I. (N) | Perungozhi | 5000.00 |
| 06 | 179 | Infant Rani A. ® | Sriperumbudur | 5000.00 |
| 07 | 317 | Loganayagi N. (N) | Thirukazhukundram | 5000.00 |

**TOTAL Rs. 35,000.00**

### PG

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 235 | Jansi Jayarani A. | Porur-Nugumbal | 5000.00 |

**TOTAL Rs. 5000.00**

### B.Ed

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 297 | Vimal Raj A. (N) | Manapakkam | 5000.00 |

**TOTAL Rs. 5,000.00**

**UG**

| S.No | App.No | Name | Parish | Amount |
|---|---|---|---|---|
| 01 | 017 | Sumathi R. (N) | Ammaiyappanallur | 2000.00 |
| 02 | 307 | Brindiya D. (N) | Chettimedu | 2000.00 |
| 03 | 005 | Jenifer L. (N) | Chingleput Cathedral | 2000.00 |
| 04 | 275 | Anthony L. (N) | Elapakkam | 2000.00 |
| 05 | 395 | Geetha A. (N) | Gandhi Nagar | 2000.00 |
| 06 | 182 | Suganthi Christina M. (N) | Guduvancherry | 2000.00 |
| 07 | 031 | Udhayam R. (N) | Kadapakkam | 2000.00 |
| 08 | 032 | Francis A. (N) | Kadapakkam | 2000.00 |
| 09 | 033 | Robert. J (N) | Kadapakkam | 2000.00 |
| 10 | 035 | KirubakaranV. (N) | Kadapakkam | 2000.00 |
| 11 | 111 | Jayaprabha M. ® | Koothavakkam | 2000.00 |
| 12 | 112 | Vinoliya D. ® | Koothavakkam | 2000.00 |
| 13 | 089 | Aksheeliya D. (N) | Mamallapuram | 2000.00 |
| 14 | 166 | Arockiya Divya S.F (N) | Medavakkam | 2000.00 |
| 15 | 291 | Sibi J. ® | Muttukadu | 2000.00 |
| 16 | 278 | Nancy Glory A. ® | Nemilicherry | 2000.00 |
| 17 | 056 | Roselin V. (N) | Ottanthangal | 2000.00 |
| 18 | 232 | Vanitha Mary T. (N) | Porur-Nugumbal | 2000.00 |
| 19 | 021 | Arokia Mary A. ® | R.N. Kandigai | 2000.00 |
| 20 | 123 | Avanthi J. (N) | Ramapuram | 2000.00 |
| 21 | 029 | Vishal Christobar L. (N) | Sellampattidai | 2000.00 |
| 22 | 127 | Divya M.M. ® | Sholinganallur | 2000.00 |
| 23 | 079 | Guru R. (N) | Sogandi | 2000.00 |
| 24 | 080 | Saraswathi S. (N) | Sogandi | 2000.00 |
| 25 | 287 | Leena Jercy M. (N) | Vanuvempet | 2000.00 |
| 26 | 288 | Abel Jude Alwin A. (N) | Vanuvempet | 2000.00 |

**TOTAL Rs. 52,000.00**

**GRAND TOTAL Rs. 2,51,500.00**

(N) New, (R) Renewal

**Rev. Fr. N. Louis Rayar**
Chancellor

**Rev. Fr. P. Charles**
Procurator

## SURPLUS MASSES

**August 2010**

| | |
|---|---|
| Parish Priest, Koothavakkam | 1,500.00 |
| Parish Priest, Old Perungalathur | 5,000.00 |
| Parish Priest, St. Thomas Mount | 15,000.00 |
| Rector, Hill Shrine, St. Thomas Mount | 20,000.00 |
| Parish Priest, Chingleput | 1,800.00 |
| Parish Priest, Tambaram | 14,150.00 |

## SEMINARIANS' FUND

**August 2010**

| | |
|---|---|
| Superior, Christ King Convent, Tambaram | 6,000.00 |
| Parish Priest, Perungalathur | 1,500.00 |
| Mr. Althea, Chennai | 500.00 |
| Mrs. Richard Pope, Pallavaram | 200.00 |
| Mr. Alex, Pallavaram | 500.00 |
| Superior, St. Bridgets Convent, Pallavaram | 500.00 |
| Mr. M.S. Abraham, Chennai | 100.00 |
| Mr. S.M. Lourdusamy, Madurantagam | 600.00 |
| Dr. G. Tony Simon Germans, Adambakkam | 20,000.00 |
| Mr. R. Amalraj Sundararaman, Maraimalai Nagar | 500.00 |
| St. Bridgets Convent, Pallavaram | 500.00 |
| Ms. Angelin Mary, Chingleput | 1,000.00 |
| Mr. Melvin Ebey, Chingleput | 500.00 |
| Ms. Violet Jacob, Chingleput | 1,000.00 |
| Parish Priest, Madha Nagar | 5,000.00 |
| Ms. E. D' Veigas, Pallavaram | 500.00 |
| Mr. A. Arokia Samy, Tindivanam | 500.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**August 2010**

| | |
|---|---|
| Parish Priest, St. Thomas Mount | 10,000.00 |
| Society of Vincent De Paul, St. Thomas Mount | 3,000.00 |
| Parish Priest, Madha Nagar | 7,500.00 |
| Parish Priest, Maraimalai Nagar | 5,000.00 |
| Youth Association, Maraimalai Nagar | 5,000.00 |
| Mr. L. Antony Praveen Kumar, Maraimalai Nagar | 500.00 |
| Mr. T. Antony Francis, Pallavaram | 400.00 |
| Parish Priest, Sendivakkam | 10,000.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**

# EIGHTH ANNIVERSARY OF EPISCOPAL ORDINATION



(29.09.2002)

*Your Excellency*
*We congratulate on the eighth anniversary of your shepherding. May God bless and continue to guide you in your ministry as shepherd of this Diocese !*

**Most Rev. Dr. A. Neethinatha**
**Bishop of Chingleput**

## ST. THOMAS THE APOSTLE CHURCH

A new chapel dedicated to St. Thomas at Patta village, Mambakkam parish was blessed by our beloved Bishop **Rt. Rev. Dr. A. Neethinathan** on 19th August, 2010. We appreciate the parish priest Rev. Fr. John Francis and the parishioners for their untiring efforts.



## DATES TO REMEMBER

### BIRTHDAYS

| | |
|---|---|
| Fr. Arockiaraj A. | 04.09.1976 |
| Fr. Lucas R. | 05.09.1975 |
| Fr. Esthakiyus P. | 10.09.1970 |
| Fr. Roch Ignatius K. | 10.09.1975 |
| Fr. Vincent Chinnadurai A. | 16.09.1953 |
| Fr. Leo Edwin R. | 18.09.1980 |
| Fr . Charles N. | 23.09.1963 |
| Fr. Benjamin Nesamani | 23.09.1975 |
| Fr. Arockiya Raymond | 25.09.1979 |
| Fr. Christuraj G. | 26.09.1969 |
| Fr. Michael Alexander | 30.09.1977 |

*Edited by:* ***Rev. Fr. N. Louis Rayar,*** *Chancellor*
*Bishop's House, Chingleput.*